Registered as a NewsPaper in Ceylon விலை சதம் 15 ★

# ஈழநாடு

THE EELANADU
National Tamil Daily

தபால் பெட்டி எண்; 49
போன் 389
தேசிய தினசரி
மலர் 13
இதழ் 246

யாழ்ப்பாணம் புரட்டாதி 29 ஷபான் 24 வெள்ளிக்கிழமை (15-10-71)

தீபாவளிப் பண்டிகையைச்
சிறப்புடன்
கொண்டாடி மகிழ
உங்கள் தரமான
ஜவுளித் தெரிவுகளுக்கு
இன்றே விஜயஞ் செய்யுங்கள்
ராஜ்கோபால்ஸ்
(பிரபல ஜவுளி மாளிகை)
36/1, பெரியகடை — யாழ்ப்பாணம்

# தலைமன்னாரில் தங்கியுள்ள இந்தியவம்சாவழியினர்கஷ்டம்

## சுங்கப்பகுதி விசாரணைக்குழு ஆராயச் செல்கிறது

கொழும்பு, வியா. இந்தியாவுக்குத் திரும்பிச் செல்வதற்காக தலைமன்னார் முகாமில் தங்கியிருக்கும் இந்திய வம்சாவழியினர்களின் கஷ்டங்களைப்பற்றி சுங்கப் பகுதி விசாரணைக் குழு ஆராயவிருக்கிறது.

சிறிமா-சாஸ்திரி ஒப்பந்தத்தின் கீழ் இந்தியாவுக்குத் திரும்பிச் செல்லும் இந்திய வம்சாவழியினர் தலைமன்னார் முகாமில் பெரும் கஷ்டங்களை அனுபவிப்பதாக தெரிவிக்கப்பட்ட புகாரினைத் தொடர்ந்து சுங்கப் பகுதி நடவடிக்கைகள் பற்றி ஆராய்வதற்காக நியமிக்கப்பட்ட ஆட்சிமன்றப் பிரதிநிதிகள் குழு தலைமன்னார் செல்லவிருக்கின்றது. இந்த மக்கள் கஷ்டம் எதுவுமின்றி இந்தியா திரும்பிச் செல்வதற்கு இக்குழுவினர் மேற்கொள்ளும் ஆய்வுகள் உதவும் என்று எதிர்பார்க்கப் படுகின்றதாம்.

திரு. எஸ். எல். டி. சில்வா தலைமையிலான இந்தக் குழுவில் திருமதி விவியன் குணவர்தன, திருவாளர்கள் ஹேரத், ரொட்றிகோ ஆகியவர்களும் அங்கம் வகிக்கிறார்கள்.

இந்திய வம்சா வழியினர் கஷ்டங்களை மட்டுமின்றி சுங்கப் பகுதியினர் கள்ளக் கடத்தலைத் தடுக்க ராணுவத்தினருடன் சேர்ந்து மேற்கொண்டு வரும் நடவடிக்கைகள் பற்றியும், சுங்கப்பகுதி ஊழியர்களின் வேலை நிலைமைகள் பற்றியும் ஆராய்வார்கள்.

எந்த நிலைமைக்கும்

## இந்தியர் தயாராய் இருக்க வேண்டுமாம்

புதுடில்லி, அக் 14

இந்தியா போர் ஒன்று ஏற்படுவதை விரும்பவில்லை. போர் ஏற்படாமலிருப்பதற்கான எல்லா முயற்சிகளையும் இந்தியா எடுத்துவரும். ஆனால் எந்த நிலைமையையும் எதிர் நோக்குவதற்கு மக்கள் தயாராய் இருக்க வேண்டும்.

இவ்வாறு பாரதப் பிரதமர் திருமதி இந்திரா காந்தி கூறியிருக்கிறார்.

காஷ்மீர் எல்லைப் பகுதியில் பாகிஸ்தான் படைகள் பெருமளவில் குவிக்கப்பட்டு வருவது பற்றி நிருபர்கள் பாரதப் பிரதமரிடம் வினவியபோதே இவ்வாறு கூறியிருக்கிறார்.

இந்தியா அமைதியையே விரும்பும் நாடு ஆனால் சண்டையொன்று வராமல் தவிர்ப்பது பாகிஸ்தானைப் பொறுத்த விஷயம் என்றார்.

பாகிஸ்தானுக்கும் இந்தியாவுக்குமிடையிலான எல்லைப் பகுதியில் பதட்ட நிலைமை இருந்து வருவதற்கு பாகிஸ்தான் தான் பொறுப்பாளி என்று ஐ.நா.விலுள்ள இந்திய பிரதிநிதி திரு. சமர்சென் நேற்று ஐ. நா. சபையில் தெரிவித்தார்.

## நெல் உத்தரவாத விலை விரைவில் அதிகரிக்கும்

### தென்மராட்சியில் அமைச்சர் தகவல்

கைதடி, வியா

நெல்லின் உத்தரவாத விலை மிக விரைவில் உயர்த்தப்படவிருக்கிறது என்று ஆட்சிமன்ற விவகார அமைச்சரும் விளையாட்டுத்துறை அமைச்சருமான திரு வே பி இரத்திநாயகா தென்மராட்சி பலநோக்குக் கூட்டுறவுச் சங்க சமாஜத்தின் மாதிரி விற்பனை நிலையத்தைத் திறந்துவைத்துப்பேசுகையில் தெரிவித்தார்.

கூட்டுறவு இயக்கத்தின் மூலம் விவசாயிகளை முன்னேற்றுவதே அரசின் நோக்கமென்றும் விவசாயிகளின் உற்பத்திப் பொருள்களை அனைத்தையும் அரசாங்கம் வாங்கத் தயாராக இருப்பதாகவும் அமைச்சர் இரத்திநாயக்கா அறிவித்தார்.

தேசிய ஒற்றுமையின் அவசியத்தை விளக்கிப் பேசிய அமைச்சர் விளையாட்டின் மூலம் தேசிய ஐக்கியத்தை உருவாக்கலாமென்பதால் தான் அந்த அமைச்சைத் தாம் பொறுப்பேற்றதாகவும் சொன்னார்.

யாழ்ப்பாணப் பகுதிக்கு அமைச்சர்கள் அடிக்கடி வந்து மக்களின் கஷ்டநஷ்டங்களையும் அவர்களின் தேவைகளையும் அறியவேண்டுமென்றும் அமைச்சர் கூறினார்.

மேலதிக அரசாங்க அதிபர் திரு ஏ ஏ ஜோசப், உதவி அரசாங்க அதிபர் திரு ரி முருகேசம்பிள்ளை சமாஜத் தலைவர் திரு சிவசிதம்பரம் பிள்ளை மற்றும் பலரும் அமைச்சரை வரவேற்று ஊர்வலமாக அழைத்துச்சென்றனர்.

சாவகச்சேரி ஆட்சிமன்ற உறுப்பினர் திரு வி என் நவரத்தினத்தின் நேர்மையையும் திறமையையும் வெகுவாகப் பாராட்டிய அமைச்சர் இந்த வைபவத்தில் கலந்துகொள்ளமுடியாமல் நுவரெலியாவில் அவசர அலுவல் இருப்பதாக

(6-ம் பக்கம் பார்க்க)

## நாவலர் முத்திரை வெளியீடு: பாடசாலைகளுக்கு விடுமுறை?

### நாவலர் சபை கோரிக்கை; விழா நிகழ்ச்சிநிரல்

யாழ்ப்பாணம், வெள்ளி

நாவலர் நினைவு முத்திரை வெளியிடப்படவிருக்கும் இம்மாதம் 29-ம் திகதியன்று வடபகுதியிலுள்ள பாடசாலைகளுக்கு விடுமுறைவிட வேண்டுமென்று கல்வியமைச்சைக் கேட்குமாறு நாவலர் சபை தபால் தந்தி அமைச்சர் திரு செல்லையா குமாரசூரியரைக் கேட்டுக்கொண்டுள்ளது

நாவலர் சபையின் பொதுச் செயலாளர் திரு. ம. ஸ்ரீகாந்தா தபால் தந்தி அமைச்சர் திரு. குமாரசூரியருக்கு அனுப்பி வைத்துள்ள கடிதமொன்றில் நாவலர் பெருமானைக் கௌரவிக்குமுகமாக அவர் நினைவாக முத்திரையொன்றை வெளியிடு [illegible] முத்திரை வெளியீட்டு வைபவத்தில் அமைச்சர் நேரடியாகக் கலந்து கொள்வதற்குச் செய்துள்ள முடிவுக்கும் நாவலர்சபை அமைச்சருக்குப் பாராட்டும் நன்றியும் தெரிவித்துள்ளது.

நாவலர் சபையுடன் ஆலோசித்து நாவலர் நினைவு முத்திரை வெளியீட்டுக்கான ஒழுங்குகளைச் செய்யும்படி தபால் தந்தி இலாகா தமக்கு உத்தரவிட்டுள்ளதாக தபால் பகுதி யாழ். மாவட்ட அத்தியட்சகர் அறிவித்ததைத் தொடர்ந்து நாவலர் சபையின் கல்வி ஆலோசனைச் சபை கூடி ஆராய்ந்ததென்றும் இக் கூட்டத்தில் தபால் பகுதி யாழ். மாவட்ட அத்தியட்சகரும் அழைப்பின் [illegible] கொண்டதாகவும் திரு. ஸ்ரீகாந்தா அமைச்சருக்கு எழுதிய கடிதத்தில் தெரிவித்திருப்பதுடன் சபை தயாரித்த முத்திரை வெளியீட்டு வைபவ நகல் நிகழ்ச்சி நிரலையும் தீர்மானங்களையும் அனுப்பியிருக்கிறார்.

இதன்படி 29-ம் திகதி காலை எட்டரை மணிக்கு தபால் தந்தி அமைச்சர் திரு. குமாரசூரியர், யாழ். மாவட்ட அரசாங்க அதிபர், யாழ். நகரமேயர்;

[5-ம் பக்கம் பார்க்க]

யாழ். ஒஸ்மானியா கல்லூரியில்

## அடுத்த ஆண்டு முதல் சிங்களத்தில் பாட போதனை

யாழ்ப்பாணம், வெள்ளி

"1972 ஜனவரி முதல் யாழ்ப்பாணம் ஒஸ்மானியாக் கல்லூரியில் முதலாம் வகுப்பிலிருந்து முழுப் பாடங்களும் சிங்களத்தில் போதிப்பதற்கான அனுமதியைக் கல்வியமைச்சர் வழங்கியுள்ளார். இதற்குத் தேவையான ஆசிரியர்களும் உரிய நேரத்தில் அனுப்பப்படவுள்ளனர்."

இவ்வாறு யாழ்ப்பாணம் ஒஸ்மானியாக் கல்லூரியின் சாரணர் ஆண்டுவிழாவில் பிரதமவிருந்தினராகக் கலந்துகொண்டு உரையாற்றிய வடமாநிலக் கல்வி அதிபர் திரு. மகாதேவ கூறினார்.

அவர் மேலும் பேசுகையில் "யாழ்ப்பாணத்தில் உள்ள மாணவர்கள் தனிப்பட்ட கல்வி நிலையங்களிலேயே சிங்களம் கற்பதற்கு நாட வேண்டியுள்ளதென்றும் இந்தக் கல்லூரியில் சிங்களப் போதனையை ஆரம்பிப்பதன் மூலம் அந்தப் பிரச்னைக்குத் தீர்வுகாண ஓரளவு முடியுமென்றும், யாழ்ப்பாணத்தில் முஸ்லிம்களுக்கென உள்ள ஒரேயொரு கல்வி நிலையமான இக்கல்லூரி, யாழ்ப்பாணத்தில் உள்ள ஏனைய பெரும் கல்லூரிகளுடன் போட்டிபோட்டு முன்னேற ஏற்ற சகல உதவிகளையும் அரசாங்கம் செய்யுமென்றும் இதற்குப் பெற்றோரும் ஒத்துழைக்கவேண்டுமென்றும் கூறினார்.

இளைப்பாறிய முஸ்லிம் கல்வியதிபர் திரு. [illegible]

[5-ம் பக்கம் பார்க்க]

## வீடு தீக்கிரை

முல்லைத்தீவு, வியாழன்

முல்லைத்தீவில் வசிக்கும் கணபதிப்பிள்ளை கோபாலபிள்ளை என்பவரின் வீடு நேற்றிரவு தீக்கிரையானது.

இது விஷமிகளின் செயலாக இருக்கலாமெனச் சந்தேகிக்கப்படுகிறது, உயிர்ச்சேதம் எதுவுமில்லை. பொருட்சேதம் ஏற்பட்டிருக்கிறது.

இச் சம்பவம்பற்றி முல்லைத்தீவுப் பொலிசார் புலன் விசாரணை செய்து வருகின்றனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வரி விளம்பரம்

மோட்டார் வாகனங்கள் மற்றும் சகலவிதமான யந்திரங்களுக்கும் உதிரிப்பாகங்கள் ஜெர்மனியில் பயிற்றப்பட்ட பொறியியலாளர்களின் மேற்பார்வையில் செய்து கொடுக்கப்படும். ராதா மெஷின் கொம்பனி, 95, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம். 3625

பட்டுச் சேலைகள் விற்பனவு! தீபாவளியா! திருமணமா!! உங்களுக்கு வேண்டிய பட்டுச்சேலைகள், முதலியனவற்றுக்கு விஜயம் செய்யுங்கள். வசந்தபுரம் சிலக்ஸ், 7, 2-ம் ஒழுங்கை, பிரவுண் வீதி, யாழ்ப்பாணம். 3639

### விற்பனைக்கு

99 ஜவ்வாது பத்திகள் திறம். ஜவ்வாது மணம் கொண்ட தரமான பத்திகள். இதன் ரம்மியமான வாசனையை மிகவும் விரும்புவீர்கள். எங்கும் கிடைக்கும். எஸ். சுப்பிரமணியம் கொம்பனி மருந்துக்கடை யாழ்ப்பாணம். 3624

### தேவை

பிள்ளைகளில்லாத அரசாங்க உத்தியோகத்தருக்கு ஜனவரி முதல் யாழ்ப்பாண நகரஎல்லைக்குள் வசதியுடன் பகுதி வீடு தேவை. விளம்பர இல. 3663, C/o ஈழநாடு லிமிடெட். யாழ்ப்பாணம். 3663

ராணி ஜெய்சங்கர் — விஜயலலிதா நடித்த
(யாழ்ப்பாணம்)
தினசரி 4 காட்சிகள்,
**நூற்றுக்கு நூறு**

ராஜா யாழ்ப்பாணம்
(தினசரி 4 காட்சிகள்)
எம். ஜி. ஆர் ★ ஜெயலலிதா
சோ — அசோகன்
நடித்த
**ஒளிவிளக்கு**

வின்ஸர் (யாழ்ப்பாணம்) தினசரி 4 காட்சிகள்
ஜெமினி - சௌகார் ஜானகி
(இரு வேடங்களில்)
ரவிச்சந்திரன் - எம். ஆர். ஆர். வாசு
நடித்த
**காவியத்தலைவி**
கதை-வசனம்-டைரக்ஷன்: கே. பாலசந்தர்

நாட்களல்ல; வாரங்களல்ல; மாதங்கள் பல தொடர்ச்சியாக......
தமிழ் நாட்டில் 58 வாரங்களும், ஈழத்தின் தலைநகர் கொழும்பில் 275 நாட்கள் தொடர்ச்சியாக காட்சியளித்து பெரும் சாதனையை நிலைநாட்டிய சித்திரம்
இப்பொழுது யாழ். மக்களை மகிழ்விக்க தீபாவளி விருந்தாக இன்று முதல்
லிடோ [யாழ்நகர்]
காலை 10-00 பி. ப. 2-00 மாலை 6-00, இரவு 9-30.



ராஜேஷ்கன்னு
ஷர்மிலா தாகூர்
சுஜித்குமார்
பரிலாஜலால்
நடித்த
சக்தி பிலிம்ஸ்
ஈஸ்ட்மன்கலர் சித்திரம்
**ஆராதனா**

வெலிங்டன் (யாழ்ப்பாணம்)
பி. ப. 2-30 மாலை 6-30 இரவு 10-00
சனி, ஞாயிறு, 4 காட்சிகள்.
**அக்கா தங்கை**
✻ ஜெய்சங்கர் ✻ கே. ஆர். விஜயா
✻ சுந்தரராஜன் ✻ சௌகார் ஜானகி
இன்னும் பலர் நடித்தது.



வி. ஏ. கணபதிப்பிள்ளை ஞானவேல் காசி
3077

### விற்பனைக்கு

ஈ. என். தொடர்பிலக்க பேஜோ 203 (Peugeot) நல்ல நிலையில் விற்பனைக்கு உண்டு. விபரங்களுக்கு:- ஆ. சின்னத்தம்பி, 24, நல்லூர் குறுக்குத்தெரு, யாழ்ப்பாணம். 3662

### தேவை

சங்கானை, சாவகச்சேரி, தெல்லிப்பளை, நெல்லியடி, கோப்பாய் முதலிய இடங்களுக்கு விற்பனையாளர் தேவை. நல்ல நிலைமையிலுள்ள தையல்மெசின், சயிக்கிள் தேவை. நேரில் தொடர்பு கொள்ளவும். கைத்தொழில் விவசாயக் கழகம் (Agricultural & Industrial Corporation) 253 கிராண்ட்வீதி, யாழ்ப்பாணம். 3665

தெங்குத் தோட்டத்தில் வேலைசெய்வதற்கு விவசாயம் கற்ற அல்லது விவசாயத்தில் அனுபவம் வாய்ந்த ஒருவர்தேவை. கோழி, மாடு, செம்மறி வளர்ப்பதற்குத் தோட்டத்திலவசதிகள் உள்ளன. இத்துறைகளில்ஆர்வம் உள்ள அனுபவம் அல்லது தகைமைகள் உடைய கஷ்டப்பட்டு உழைக்கக்கூடியவர்கள் மட்டுமே விண்ணப்பிக்கலாம். சம்பள அடிப்படையில் நியமனம் வழங்கப்படும். சம்பளம்: பேச்சுவார்த்தை மூலம் நிர்ணயிக்கப்படும். அல்லது பங்கு அடிப்படையிலும் வழங்கப்படலாம். இருப்பிடவசதி அளிக்கப்படும். (2) வளர்ப்பதற்கு 50ல் இருந்து 100 வரை செம்மறி மறியாடுகள் தேவை. சராசரி வயதையும், எதிர்பார்க்கும்விலையையும் அறிவிக்கவும். விளம்பர இல: 3666, C/o ஈழநாடு லிமிடெட், யாழ்ப்பாணம். 3666

நாகம்ஸ்சினிமா
சுன்னாகம்
தினசரி: 4-30
சனி, ஞாயிறு: 10-30
SHENA DOAH
தினசரி 6-30, 9-45
சனி, ஞாயிறு 2-30
ஒளவையார்

வெல்லிசினிமா
(மானிப்பாய்)
பி. ப. 2-30, 6-30, 10-00
ஜெய்சங்கர் - விஜயலக்ஷ்மி
நடித்த
வல்லவன் ஒருவன்

MANOHARA
Jaffna
Daily 4 shows
Guliano Gemma
Bibi Andersson
in
BLOW HOT
BLOW COLD
(color - strictly for adults)

# 'வடபகுதியில் 25,000 படித்த வாலிபர்கள்
## இவர்களுக்கு விரைவில் வேலை வழங்கவேண்டும்'

யாழ்ப்பாணம், வெள்ளி வடமாகாணத்தில் 25,000 படித்த வாலிபர்கள் வேலை இல்லாது இருக்கிறார்கள். இவற்றுள் 400 வாலிபர்கள் கைத்தொழில் திட்டத்தில் வேலைபெறுவார்கள். மிகுதிப் பேருக்கு அரசாங்கத்தினதும் தனிப்பட்டவர்களினதும் வர்த்தக கைத்தொழில் ஸ்தாபனங்களிலும் வேலைகொடுபடல் வேண்டும். அவர்கள் தப்பான வழியிலும் விரும்பத்தகாத நடவடிக்கையிலும் அவர்களுடைய மனதைப் போகவிடாத கூடியவேதியில் இது செயல்படுத்தப்படுதல்வேண்டும்.

வட இலங்கை வர்த்தகக் கைத்தொழில் சம்மேளன விசேஷ கருத்தரங்கில் உறுப்பினர்களின் பேச்சுவார்த்தைக்குப் பின் மேற்கண்டவாறு தீர்மானம் எடுக்கப்பட்டது. இக்கருத்தரங்கில் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்ட யாழ்ப்பாண மாவட்ட அரசாங்க அதிபர் திரு. விமல் அமரசேகரா உரையாற்றினார்.

வட இலங்கையின் வர்த்தகம் கைத்தொழிலுக்கு அரசாங்க அதிபரின் அறிவுரைகள் என்னும் பொருள் பற்றி அரசாங்க அதிபர் உரையாற்றினார். சமாசத்தின் அங்கத்தவர்களின் மூன்றாவது ஒன்று சேர்தல் கூட்டத்தில் அதிகமான உறுப்பினர்கள் கலந்து கொண்டனர்.

இக்கருத்தரங்கில் முக்கிய கவனத்திற்கு எடுத்துக் கொள்ளப்பட்ட சில விஷயங்கள் வருமாறு:

வர்த்தக, கைத்தொழில் அதிபர்களும் நிர்வாகஸ்தர்களும் கைத்தொழில் உற்பத்திப் பொருட்களை உற்பத்தி செய்வதில் பொதுவாக அரசாங்க அதிகாரிகளின் நிர்வாகக் கட்டுப்பாடும் அதன் விளைவாகத் தடங்கல்களும் ஏற்படுவது சகஜம். ஆனால் நாட்டின் நலன் கருதி அவ்விதமான நடவடிக்கைகள் எடுப்பது மிகவும் அவசியமாகின்றது. இவற்றைச் சுலபமாகவும் எளிதாகவும் அவ்வித கட்டுப்பாட்டை நிவர்த்திபண்ணப் போதுமான வாய்ப்பு இருக்கிறது. நாங்கள் வசிக்கும் நாட்டிற்கும் சமூகத்திற்கும் அரசுக்கும் கண்ணியமான முறையில் பொறுப்புணர்ச்சியுடன் கைத்தொழில்வர்த்தக ஸ்தாபனங்களின் அங்கத்தவர்கள் நடந்துகொண்டார்களேயாகில் பெரும்பாலும் அதே கட்டுப்பாடுகள் அவசியமில்லாது போய்விடும். அதிகாரிகள் தங்களுக்கு ஏற்படும் நிர்வாகப் பிரச்னையும் கட்டுப்பாடும் தங்களுக்கு மேலே உள்ள உயர் அதிகாரிகளினாலும் ஏற்படுவதினால் இந்த ஒரு நடைமுறையினால் தற்காலிக மன ஆறுதலும் அவர்களைப் பற்றி நன்கு புரிந்துகொள்ளவும் ஏதுவாக இருக்கும்.

யாழ்ப்பாணப் பகுதியில் உள்ள காணிகளும் நீர்வளமும் பெரும்பாலும் பயன்படுத்தப்படுவதாக எதிர்பார்க்கிறோம். ஆகையால் கமத்தொழிலில் இருந்துவந்த கவனத்தை இனி நாம் கைத்தொழிலின் பக்கம் திருப்பவேண்டிய அவசியம் ஏற்பட்டிருக்கின்றது. கைத்தொழில் உற்பத்திப் பொருட்கள் விற்பதற்கும் விநியோகிப்பதற்கும் ஏற்றுமதி செய்வதற்கும் வர்த்தக ஸ்தாபனங்களின் மூலந்தான் நடைபெறவேண்டும். வர்த்தகமும் கைத்தொழிலும் பிரிக்கமுடியாத இரட்டைக் குழந்தைகளுக்குச் சமானமாகும். ஆகவே வர்த்தகம் கைத்தொழில் இரண்டையும் வடமாகாணத்தில் விருத்திசெய்வதற்கான வாய்ப்பும் அத்தியாவசியமும் ஏற்பட்டிருக்கின்றது.

எதிர்பார்த்த பகுதித் திட்டத்தின்படி அரசாங்கமும் தனிப்பட்டவர்களும் நெருக்கமாக இணைந்து இந்த மாவட்டத்தில் உள்ள கைத்தொழிலை விருத்திசெய்தல் வேண்டும். உத்தியோகம் கொடுப்பதற்காக மட்டும் கைத்தொழிலை ஆரம்பிக்கக் கூடாது. உதாரணமாகக் கைத்தறிச் சாரங்கள் கூடிய அளவு உற்பத்திசெய்திருப்பது கவனிக்கத்தக்கது.

இப்பொழுது நாடெங்கும் எங்கும் விஸ்தீரணமடைந்து வரும் மின்சார விஸ்தரிப்பால் வட மாகாணத்தில் உள்ள கிட்டத்தட்ட 25,000 மண்ணெண்ணை நீர் இயந்திரங்களுக்குப் பதிலாக மின்சாரத்தினால் இயங்கும் இயந்திரங்களை மின்சார அளவுக்கருவி ஒன்றின் மூலம் எல்லோரும் பாவிப்பதற்கு வாய்ப்பு இருக்கின்றது. இதன் மூலம் நாங்கள் வெளிநாட்டுச் செலாவணியை மிச்சப்படுத்தலாம்.

கைத்தொழிற்பேட்டைக்கு விண்ணப்பித்து எதிர்பார்க்கும் கைத்தொழிலாளர்களுக்கும் நடைமுறையில் இருக்கும் கைத்தொழில் அதிபர்களுக்கும் உதவுமுகமாக அச்சுவேலிக் கைத்தொழிற்பேட்டையை அடுத்த வருடத்திற்குள் ஆரம்பிக்கப்படலாம். மாங்கனியிலிருந்து ஒருவகைக் குடிவகையும் ஏற்றுமதிக்குத் தரமான புகையிலைச் சுருட்டுகளும் யாழ்ப்பாணத்தில் உற்பத்திசெய்யக்கூடிய சாத்தியக்கூறுகள் இருக்கின்றன.

சுற்றிவரவுள்ள ஆழமில்லாத பரந்த வெளிக் கடலின் மூலம் இலங்கையும் வட மாகாணமும் மீன்பிடித்தொழிலை கூடுமான வரை விருத்திசெய்யலாம். பாவனைக்கும் கமத்தொழிலுக்கும் உபயோகப்படுத்தப்படும் தண்ணீர் விநியோகத்தினால் இம்மாவட்டத்திற்குப் பெரும் பிரச்னையாக இருக்கின்றது.

......

றீகல் (யாழ்ப்பாணம்)
தினசரி பி. ப. 2-00, இரவு 10-00 மணி
எம். ஜி. ராமச்சந்திரன் தேவிகா
நடித்த
ஆனந்தஜோதி
Daily 5-15, 7-15 p. m.
Sat. Sundays 10-30
Jack Lord
Shirley Knight
in
THE COUNTERFEIT KILLER
(Color)

## போலியோ அபாயம்

குருநகர், புதன் வடபகுதியில் போலியோ பரவிவருவதாகக் கூறப்படுகின்றது. கன்னாகப்பகுதியில் கூடுதலாகப் பரவிவருவதாக அப்பகுதி சுகாதாரப் பரிசோதகர்கள் கருதுகின்றனர்.

இவ்வியாதிக்கு இலக்கான பல குழந்தைகள் யாழ். அரசினர் வைத்தியசாலையில் அனுமதிக்கப் பட்டுள்ளனர்; போலியோ தடுப்பு நடவடிக்கைகளை மேற்கொள்ள சுகாதாரப்பகுதி நடவடிக்கைகள் மேற்கொண்டு வருவதாக வடபகுதி சுகாதாரப் பகுதியினரிடமிருந்து தெரிய வருகிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கி. வங்கம் பற்றிய சோவியத் கொள்கை மாறாது

மாஸ்கோ, அக். 14

கிழக்கு வங்காளம் சம்பந்தமான சோவியத்யூனியன் கொள்கையில் எதுவித மாற்றமும் செய்யப்படவில்லையென இந்தியாவுக்கு சோவியத் யூனியன் உறுதியளித்திருக்கின்றது.

மாஸ்கோவிலுள்ள இந்திய தூதரகத்துடன் சோவியத் அதிகாரிகள் நடத்திய ஆலோசனைகளின் போது இந்த உறுதிமொழி தெரிவிக்கப்பட்டது.

கிழக்கு வங்காளத்திலுள்ள ஜனநாயக சக்திகளுக்கு சோவியத் யூனியன் ஆதரவளித்து வரும் என பிரதமர் கொஸிஜின் மிகத் தெளிவாகச் சொல்லியிருப்பதை சோவியத் யூனியன் அதிகாரிகள் இந்தியாவிடம் சுட்டிக்காட்டியுள்ளனர்.

சோவியத் யூனியனுக்கும் அல்ஜீரியாவுக்கு மிடையில் கைச்சாத்தாகியுள்ள ஒப்பந்தமொன்றின் காரணமாக கிழக்குவங்கம் சம்பந்தமான சோவியத் கொள்கையில் மாற்றமேற்படலாமென நிலவிய ஹேஷ்யத்தைப் போக்கும் வகையில் இந்த விளக்கம் கிடைத்திருப்பதாக அவதானிகள் கருதுகிறார்கள்.

### எல்லையில் படைகுவிப்பு

இந்தியாவுடனான பாகிஸ்தான் எல்லையில் பெருமளவில் படைகள் குவிக்கப்பட்டு வருவதாக சோவியத் பத்திரிகைகள் செய்திவெளியிட்டு வருகின்றன. பாகிஸ்தான் இராணுவத்தில் 80சதவீதம் இந்திய எல்லையில் குவிக்கப்பட்டுள்ளன வென்றும் இந்த எல்லையிலுள்ள பொதுமக்கள் அனைவரும் வேறு இடங்களுக்கு அப்புறப்படுத்தப்பட்டு வருகிறார்கள் என்றும் அப்பத்திரிகைகள் செய்திகளை வெளியிட்டுள்ளன.

### முன்னாள் கவர்னர் சுட்டுக்கொலை

கிழக்குப் பாகிஸ்தானில் முன்பு கவர்னராக இருந்த ஒருவர் சுடப்பட்டு மரணமாகியுள்ளார். அப்துல் முனிம்கான் என்ற இந்த முன்னாள் கவர்னர் டாக்கா ஆஸ்பத்திரியொன்றில் நேற்று காலமானார்.

கொரில்லாக்கள் இவரை சுட்டு படுகாயங்களுக்குள்ளாக்கியதாக செய்திகள் தெரிவிக்கின்றன.

புதிய அரசியல் அமைப்பு சட்டம் தயாரிப்பதற்கான ஆலோசனைக் குழு சபையில் கோனீலியஸ் என்பவர் இடம்பெற்றிருப்பதை மக்கள் கட்சித் தலைவர் திரு சுல்பிகார் அலிபூட்டோ குறைகூறியிருக்கிறார். திரு கோனீலியஸ் ஒரு கிறிஸ்தவரென்றும் இஸ்லாமியரின் தேவைகள் பற்றி அவருக்கு தெரியாதென்றும் திரு பூட்டோ கூறியிருக்கிறாராம்.

### இந்தியருக்கு எச்சரிக்கை

எந்தவொரு ஆத்திரமூட்டும் செயலையும் எதிர்நோக்குவதற்கு இந்திய மக்கள் தயாராய் இருக்க வேண்டுமென பாரதப் பிரதம மந்திரி திருமதி இந்திராகாந்தி எச்சரிக்கை விடுத்துள்ளார்.

பாகிஸ்தான் படையினர் தொடர்ந்து இந்திய எல்லையில் தாக்குதல்களை நடத்தி வருவதாகவும் திரிபுரா பகுதியில் இந்திய கிராமங்கள் மீதும் பாகிஸ்தான் படையினர் நடத்தியுள்ள தாக்குதல்களின் காரணமாக உயிர்ச் சேதங்கள் ஏற்பட்டிருப்பதாகவும் அகதிகள் முகாம்கள் மீதும்கூட தாக்குதல்கள் நடைபெற்றிருப்பதாகவும் கூறப்படுகின்றது. இதன் காரணமாகவே பாரதப்பிரதமர் திருமதி காந்தி மேற்கண்ட எச்சரிக்கையை விடுத்திருப்பதாகத் தெரிகின்றது.

வங்காளதேசத் தலைவர்களும் மக்களால் தெரிவு செய்யப்பட்ட பிரதிநிதிகளும் ஏற்றுக்கொள்ளும் வங்காளத்துக்கான அமைதித் தீர்வை இந்தியா ஏற்றுக்கொள்ளும் என திருமதி இந்திரா காந்தி தெரிவித்தார்.

திருமதி காந்தி பெல்காமுக்குச் செல்லும் வழியில் பத்திரிகையாளர்களுக்கு அளித்த பேட்டியிலேயே மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

மேலும் அவர் கூறுகையில் இந்தியா பாகிஸ்தானுக்கு எதிராக எப்பொழுதும் போர் தொடுக்காது. ஆனால் இந்தியாமீது போர் தொடாமல் பார்த்துக் கொள்ள வேண்டியது பாகிஸ்தானின் பொறுப்பு என்றார்.

## அகதிகள் விபரம்

கல்கத்தா, அக். 14

இந்தியாவுக்குள் குடிபெயர்ந்து வந்துள்ள அகதிகள் பற்றிய கடைசிக் கணக்குகளின்படி இதுவரை 90 லட்சத்து 91 ஆயிரம் பேர் இந்தியாவுக்குள் வந்துள்ளார்கள்.

மேற்குவங்கம், திரிபுரா ஆஸாம், பீகார், மத்திய பிரதேசம், உத்தரபிரதேசம், ஆகிய பகுதிகளில் அமைந்துள்ள 15 மத்திய முகாம்களில் 3,88,582 பேர் இருக்கிறார்கள். இந்த ராஜ்யங்களிலுள்ள ராஜ்யமுகாம்கள் 935-ல் 262,52 000 பேர் இருக்கிறார்கள், முகாம்களுக்கு வெளியில் 24,50.000 பேர் இருக்கிறார்கள்.

இவர்களை 800 டாக்டர்களும், 2000 சுகாதார ஊழியர்களும் 50 மருத்துவ மாணவர்களும் கவனித்து வருகிறார்கள். இந்த ராஜ்யங்களில் 50 ஆஸ்பத்திரிகளும், 700 சுகாதார நிலையங்களும் இவர்களுக்காக அமைக்கப்பட்டுள்ளன

இதுவரை 54,00,00 அகதிகளுக்கு தடுப்பூசி மருந்தேற்றப்பட்டுள்ளது. 40,00,000 [illegible] பல்நாடுகள் இதுவரை இந்த அகதிகளின் நலனுக்கென சுமார் 9 கோடி ரூபாய்பெறுமதியான உதவிகளை வழங்கியுள்ளன.

சோவியத்யூனியன

## எகிப்துக்குராணுவ உதவிகள் அதிகரிக்கும்

மாஸ்கோ, அக். 14

இஸ்ரேலுக்கு எதிராக சோவியத்யூனியன் எகிப்துக்களித்துவரும் ராணுவ உதவிகளை அதிகரிக்கவிருக்கின்றது.

எகிப்திய அதிபர் அன்வர்சதாத் சோவியத்யூனியனுக்கு விஜயம் செய்து சோவியத் தலைவர்களைச் சந்தித்ததின்பின்னர் வெளியான கூட்டறிக்கையில் இந்த உறுதிமொழி தெரிவிக்கப்பட்டுள்ளது.

அரபு இஸ்ரேல் பிரச்னை 1967ம் ஆண்டு ஐ. நா. பாதுகாப்புசபை நிறைவேற்றிய தீர்மானத்தின் அடிப்படையில் தீர்க்கப்பட வேண்டும். என்று இருநாடுகளும் கூட்டறிக்கையில் வற்புறுத்தியுள்ளன.

அதிபர் சதாத் சோவியத் தலைவர்களுடன் ஆலோசனைகள் நடத்திய பின்னர் யூகோஸ்லாவியாவுக்குப் புறப்பட்டுச்சென்றார்.

### யு. எஸ். அமைச்சர் ஆலோசனை

சூயஸ்கால்வாயைத் திறந்துவிடுவதற்கான இடைக்கால ஒப்பந்தம் ஒன்றைப் பற்றி அமெரிக்க ராஜாங்க அமைச்சர் திரு. ரோஜர்ஸ் இஸ்ரேலிய வெளிஉறவு மந்திரி திரு. அபாஈபானுடன் ஆலோசனைகள் நடத்தினார். எகிப்திய வெளிஉறவு அமைச்சர் திரு ரியாத் சோவியத் யூனியனுக்கு புறப்படுவதற்குமுன்பு அமெரிக்கராஜாங்க மந்திரி திரு. ரோஜர்ஸைச் சந்தித்துப் பேசினார்.

## யு. எஸ்.-கியூபா உதவிபற்றி செனட்டர் கென்னடி

சிக்காகோ ஒக் 14

அமெரிக்காவுக்கும் கியூபாவுக்கு மிடையேயுள்ள பகைமையுணர்ச்சி நீக்கப்பட்டு இருநாடுகளுக்குமிடையே ராஜிய உறவுகள் புதுப்பிக்கப்படவேண்டும் என்று செனட்டர் எட்வர்ட் கென்னடி கூறியுள்ளார்.

சிக்காகோ வெளிநாட்டு உறவுக் கவுன்சிலில் பேசிய அவர் மேலும் கூறுகையில் முன்பு தீர்மானிக்கப்பட்ட மூன்று அம்சத் திட்டத்தின் அடிப்படையில் மீண்டும் இரு நாடுகளுக்குமிடையிலான உறவுகள் புதுப்பிக்கப்படவேண்டும். அமெரிக்காவுக்கும் லத்தீன் அமெரிக்க நாடுகளுக்குமிடையே பிளவுகள் அதிகரித்துவருவதற்கு அதிபர் நிக்ஸனின் திறமையற்ற நிர்வாகக் குறைபாடுதான் காரணமாகும் கியூபாவுக்கும் அமெரிக்காவுக்குமிடையே வர்த்தக விமானப் போக்குவரத்து ஆரம்பிக்கப்படவேண்டுமென்பதை அவர் இக்கூட்டத்தில் வலியுறுத்திக் கூறினார்

## யு. எஸ். பெண்களுக்கு சம உரிமைவழங்கும் சட்டம்

நியூயோர்க், ஒக். 14

அமெரிக்கப் பெண்களுக்கு சம உரிமையும் கட்டாய இராணுவ சேவையில்சேரும் உரிமையும் அளிக்கும் அரசியல் சட்டத்திருத்த மசோதாவொன்று அமெரிக்க மக்கள் பிரதிநிதிகள் சபையில் மிகவும் பெரும்பான்மை வாக்குகளைப் பெற்று நிறைவேறியுள்ளது.

இந்த மசோதாவுக்கு ஆதரவாக 357 வாக்குகளும் எதிராக 23 வாக்குகளும் அளிக்கப்பட்டன.

இந்த மசோதா இங்கு மிகவும் பெரும்பான்மை வாக்குகளைப் பெற்று நிறைவேறிய பொழுதிலும், இது அரசியல் சட்டத்தில் இடம் பெறுவதற்குப் பல கட்டங்களைத் தாண்டவேண்டியுள்ளது.

இந்த மசோதா இனி செனட்டுக்குச் செல்லும். அங்கு மூன்றில் இரண்டு பங்கு அதிகப்படி வாக்குகளை தனக்கு ஆதரவாகப் பெறவேண்டும். அதுமட்டுமல்ல நாட்டிலுள்ள மாநில சட்டமன்றங்களில் நாலில் மூன்று பகுதியினர் இதனை ஏற்றுக்கொள்ள வேண்டும். பெரும்பாலும் இம்மசோதா இவர்களின் ஆதரவை பெறுமென அமெரிக்க மாதர் சங்கங்கள் நம்பிக்கை தெரிவித்துள்ளன.

### 25 வருட ஆசிரியர் சேவை

உடுப்பிட்டி வியாழன் நவிண்டில் தெற்கைச் சேர்ந்த பண்டிதர் திரு. வே. கந்தவனம் தனது 25 வருடகால ஆசிரியர்சேவையினின்றும் இளைப்பாறியுள்ளார். நவிண்டில் பலநோக்குக் கூட்டுறவுச் சங்க ஸ்தாபகரான இவர் அதன் தலைவராகப் பத்துவருடகாலம் பணிபுரிந்துள்ளார்.

### மனைவியை அன்பளிப்புசெய்த கணவர்

கோழிக்கோடு ஒக் 14

தனது இளம்மனைவியுடன் கள்ளநட்புக் கொண்டிருந்த வாலிபருக்கே தனது மனைவியை அன்பளிப்பாக வழங்கினார் ஒரு கணவர்.

பதினொரு ஆண்டுகளுக்கு முன் திருமணம் புரிந்துகொண்ட ஒருவர் இருகுழந்தைகளுக்குத் தாயானபிறகு தன் இளம்மனைவி இன்னொருவருடன் கள்ளநட்புக்கொண்டிருப்பதை அறிந்துகொண்டார் இருவரையும் பொலிஸ் நிலையம் அழைத்துச்சென்ற அவர் அவர்களைப் பொலிசில் ஒப்படைப்பார் என்று எதிர்பார்த்தார்கள். மாறாக அவர் தமது மனைவியை அந்த வாலிபனுக்கே அன்பளிப்பாகக் கொடுக்கப்போவதாகப் பொலிசில் சொல்லிவிட்டார். காதலர்கள் கைகோர்த்துக்கொண்டு போனார்கள் கணவர் தம் இரு குழந்தைகளையும் அழைத்துக்கொண்டு திரும்பினார்.

மணப்பெண்களுக்கு ஓர்

இணையற்ற

விசேட வெகுமதி!

திருமணத்தை எதிர்நோக்கி நிற்கும் எந்த ஒரு மணமகளும், திருமணப் பதிவுகாரரின் கடிதம், தனது திருமண அறிவித்தல் அல்லது திருமணநிச்சயார்த்தத்தை நிரூபிக்க ஏற்றுக்கொள்ளத்தக்க ஏதாவதொரு தஸ்தாவேஜு, இவற்றில் ஏதாவதொன்றைக் காண்பித்து, அத்துடன் 1971 அக்டோபர் 31-ந் திகதி நடைபெறும் 31-வது மஹா ஜன சம்பத சீட்டிழுப்பு டிக்கெட்டுகளில் இருபத்தைந்தை (25) அல்லது 1971 அக்டோபர் 18-ந் திகதி நடைபெறும் 367-வது தேசிய லொத்தர் சீட்டிழுப்பு டிக்கெட்டுகளில் ஐம்பதை (50) சேர்த்து அந்தந்த சீட்டிழுப்பு திகதிகளுக்கு முன், கையளித்து, கொழும்பு-3, காலி வீதி 502/1ம் இலக்கத்திலுள்ள தேசிய லொத்தர் சபைக்கு ரூபா 950/- அல்லது ரூபா 700/- அல்லது ரூபா 200/- அல்லது ரூபா 175/- செலுத்தி ஒரு இந்தியன் கூறை சில்க் சாறியை விசேட பரிசாகப் பெற்றுக் கொள்ளலாம். இவ்விசேட பரிசுகள் வேலை நேரங்களில் "முதல் வருபவருக்கு முதல் தருவது" என்ற அடிப்படையில் வழங்கப்படும்.

இந்த டிக்கெட்டுகள் யாவும், கூறைச் சேலை வழங்கப்பட்டதும், அதற்கு வேண்டிய குறியீடுகள் இடப்பட்டு, உரியவருக்குத் திருப்பித் தரப்படும்.

தேசிய லொத்தர் சபை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வடமராட்சியில்

# 3250 ஏக்கர் நிலத்தில் நெற்சாகுபடி செய்ய திட்டம்

உடுப்பிட்டி, வியாழன் நீர்வளம் குன்றிய தன்மை யால் மழையை நம்பி விவசாயம் செய்யும் பூமியான வடமராட்சி தெற்கு-மேற்கு காரியாதிகாரி பிரிவிலுள்ள மொத்தம் 3,314 ஏக்கர் விஸ்தீரணமுள்ள வயல்களில் 3,250 ஏக்கரில் நெற்சாகுபடி செய்யத் திட்டமிடப்பட்டுள்ளது.

வடமராட்சி தெற்கு-மேற்கு காரியாதிகாரி பிரிவு விவசாய அபிவிருத்தியின் 1971-ம் ஆண்டுக்கான செயற்திட்டத்தில் இத்தகவல் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இவ்விவசாய அபிவிருத்தித் திட்டத்தில் மேலும் குறிப்பிட்டுள்ளதாவது:-

'மிதிப்பகுதி வயல்கள் உவர்த்தன்மை கொண்டதாகக் காணப்படுகின்றன. அவற்றை நவீன சாதனங்கள் மூலம் வளமுள்ளதாக ஆக்கிவிட நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுவருகின்றன. 'ஜிப்சம்' என்னும் உரத்தை உபயோகித்து உவர் மண்ணை வளமாக்கலாம். இம்முறை விதைக்கப்படவிருக்கும் எச் 4, ஐ ஆர் 8 மற்றைய நாட்டினங்கள் இவைகள் போன்றவற்றுடன் 'கைபிறிட்' 62/355, டிக்கி, மினுலொற் என்பனவும் புகுத்தப்படும்.

இவ்வாண்டு சரியான விகிதாசாரப்படி உரத்தினை உபயோகப்படுத்துவதுபற்றி விவசாயிகளுக்கு அறிவுரை வழங்கப்பட்டு வருகின்றது. செயற்கை முறையுடன் இயற்கைப் பசளையையும் உபயோகப்படுத்தல் வேண்டும் என்ற கருத்து ஆழமாகப் பரிசீலிக்கப்பட்டது. மழை குறைவான காரணத்தால் இரசாயனத்தால் களைபிடுங்கும் வேலையைச் செய்யமுடியாதவிடத்து ஆகுதல் 300 ஏக்கரிலாவது இரசாயனத்தின் துணைகொண்டு களைபிடுங்க முடியுமா எனப் பரிசோதிக்கத் திட்டமிட்டுள்ளோம். உழவர்கள் வரிசை நடுகை மேற்கொண்டால் களைபற்றுதல் எளிதாகும்.

இம்முறை ப நோ கூட்டுறவுச் சங்கங்கள் நேரகாலத்துடன் கடன்தேவைகளுக்கு விண்ணப்பிக்கவேண்டுமென்றும் இவ்விவசாய அபிவிருத்தித்திட்டத்தில் அறிவிக்கப்பட்டுள்ளது. வெங்காயம் பெரும்போகத்தில் 436 ஏக்கர்களிலும் இடைப்போகத்தில் 268 ஏக்கர்களிலும் உற்பத்திசெய்யத் திட்டமிடப்பட்டுள்ளது. மிளகாய் இடைப்போகப்பயிராக 361 ஏக்கர் நிலத்தில் பயிரிடப்படும்.

இவ்விவசாய அபிவிருத்தி செயற்படுத்து திட்டத்தைப் பூரணமாக்கும் முயற்சியில் வடமராட்சி தெற்குமேற்குக் காரியாதிகாரி திரு சே மாணிக்கவாசகர் தீவிரமாக ஈடுபட்டுள்ளார்.

— —

## ஆவரங்காலில் வற்றாத ஊற்று

பருத்தித்துறை, வியா ஆவரங்காலில் கிணறு ஒன்று வெட்டப்பட்டுக் கொண்டு போகும்போது வற்றாத நீரை அள்ளிவீசும் ஊற்று ஒன்று காணப்பட்டது. பல தண்ணீர் இறைக்கும் இயந்திரங்களால் இக்கிணறு இறைத்தும் வற்றவில்லையாம். வலிகாமம் கிழக்கு காரியாதிகாரியும், விவசாயத் திணைக்கள அதிகாரிகளும் இதைப்பார்வையிட்டனர். இப்பகுதியில் ஒரு சிறந்த நீர்ப்பாசனத் திட்டம் உருவாக்கப் படலாமெனத் தெரிகிறது.

## வடக்கில் யுனெஸ்கோ கருத்தரங்கு

பருத்தித்துறை, வியா இம்மாதம் 31-ம் திகதி யுனெஸ்கோ கருத்தரங்கு ஒன்று யாழ். மத்திய கல்லூரியில் நடைபெறவுள்ளது அன்று காலை கல்வியமைச்சின் நிரந்தரச் செயலாளர் டாக்டர் பிரேமதாச உடகம தொண்டமானாற்றில் கட்டப்பட்டுள்ள வெளிவேலை நிலையத்தைத்திறந்து வைப்பார். அதையடுத்து யுனெஸ்கோவின் பிரதிநிதியான டாக்டர் ருவன்னுவ தொண்டமானாற்றில் அமெரிக்க உதவியுடன் கட்டப்பட்ட கட்டிடத்தைச் சம்பிரதாய முறைப்படி திறந்து வைப்பார்.

அன்று பிற்பகல் 2மணியளவில் நடைபெறவிருக்கும் விஞ்ஞான ஆசிரியர்கள் கல்விமான்கள் ஆகியோரின் கருத்தரங்கைத் தொடர்ந்து அன்றுமாலை வேம்படி மகளிர் கல்லூரியில் ஒரு படக்காட்சியும் பல பாடசாலைகள் பங்குகொள்ளும் ஒரு கலைவிழாவும் நடக்கவிருக்கின்றன. ……

## கூப்பன் யாருடையது?

யாழ்ப்பாணம், வெள்ளி யாழ்ப்பாணம் சிவன் பண்ணை வீதியைச் சேர்ந்த வ. இராசையா என்பவரால் அதே வீதியில் கூப்பன் புத்தகமும் உப உணவு அட்டையும் கண்டெடுக்கப்பட்டு "ஈழநாடு" காரியாலயத்தில் ஒப்படைக்கப் பட்டுள்ளன. உரியவர்கள் காரியாலய நேரத்தில் வந்து பெற்றுக் கொள்ளலாம்.

## "விளையாட்டு மூலம் துவேஷம் நீங்கும்"

பருத்தித்துறை, வியா "விளையாட்டுகள் மூலம் துவேஷங்களை நீக்கிப் புதிய சமுதாயத்தைக் கட்டி எழுப்பலாம்" என்று சிறுபான்மைத் தமிழர் மகாசபைத் தலைவரும் நியமன எம். பி யுமான திரு. எம். ஸி. சுப்பிரமணியம் வதிரி தமிழ் மன்ற சரவந்தாட்ட இறுதிப் போட்டி பரிசளிப்பு விழாவில் கலந்து உரையாற்றிய போது குறிப்பிட்டார்.

உடுப்பிட்டி எம் பி திரு ஜெயக்கொடி கொடியேற்றி விழாவை ஆரம்பித்துவைத்தார். யாழ் மேயர் திரு. அ. அல்பிரட் துரையப்பா பரிசில்கள் வழங்கினார்

இமையவாணன் விளையாட்டுக்கழகம் உடுவில் ஸ்ரார்ஸ், யாழ். பொலிஸ் கோஷ்டிகளுக்கு கேடயங்கள் வழங்கப்பட்டன.

……

## முத்தமிழ் விழா

வல்வெட்டித்துறை, வியா திக்கம் தமிழ் வளர்ச்சிக் கழகத்தின் முத்தமிழ்விழா இம்மாதம் 17ம் திகதி மடத்துவாசல் பிள்ளையார் கோவில் அரங்கில் நடைபெறவிருக்கிறது. இவ் விழாவுக்கு வடமராட்சி வடக்கு கிழக்கு காரியாதிகாரியான திரு மு தம்பிமுத்து தலைமை தாங்குவார். இவ் விழாவில் காசி ஆனந்தன், செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி, ஈழவேந்தன் உட்படபலர் உரையாற்றுவர்.

## இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம்

15-10-71 வெள்ளி

(செய்திகள்: காலை 6-30, பகல் 12-45 மாலை 6-00, இரவு 9-00)

294 மீ அலை 59 மீ

காலை 6-15 நாதாஞ்சலி, 6-20 சைவநற்சிந்தனை, 6-25 இஸ்லாமியநற்சிந்தனை 7-00 விவசாய நிகழ்ச்சி, 7-15 பண்ணுரிந்தமிழ், 7-45 மெல்லிசை 8-00 மயனுள் குரான், 8-15 இஸ்லாமிய பாடல்கள்.

இரவு 6-10 இடைவேளை இசை 6-30 பஜனை-ஸ்ரீ முத்துவிநாயகர் ஆலயபூசை அஞ்சல், 7-00 மாதர் நிகழ்ச்சி, 7-30 மெல்லிசை, 7-40 மாக்திநெறி, 8-00 முஸ்லிம் நிகழ்ச்சி, 8-25 இஸ்லாமிய பாடல், 9-30 விஞ்ஞான உரைநிகழ்ச்சி, 9-40 பாட்டு 10-30 செய்தித் தொகுப்பு.

……

## பாக்குத் தட்டுப்பாடு

மாவிட்டபுரம், வியா மாவிட்டபுரம், காங்கேசன்துறை, தெல்லிப்பளை பகுதியில் பாக்குக்கு பெருந் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது.

இப்பகுதியில் உள்ளகடைகளில் பாக்கு கிடைப்பதாக இல்லை. சில கடைகளில் கிடைத்தாலும் இருந்தல் 4 ரூபா வரையில் விற்கப்படுகின்றது. ப நோ கூ சங்கக் கடைகளில் ரூ. 3-50 சதத்துக்கு விற்கப்படுகிறது.

பாக்கு விலை ஏறியபோதும் வெற்றிலை மலிவாகக் கிடைக்கின்றது.

## இன்றைய பலன்

புரட்டாதிமாதம் 29-ம்திகதி

வெள்ளிக்கிழமை

(15-10-71)

மேஷம்- புண்ணிய காரியங்களில் ஈடுபடுவீர்கள். பொதுமக்களின் மதிப்பும் கிட்டும், சுமுகமான நாள்

ரிஷபம்- எதிரிகள் மத்தியில் ஏற்படும் மனமாற்றம்; உங்கள் செல்வாக்கை வளர்க்கும்; சுபதினம்.

மிதுனம்- புதுமையான எண்ணங்கள் தலைதூக்கும்; பொதுமக்களின் ஆதரவு கிடைக்கும்.

கடகம்- விவசாயிகள் வாழ்க்கையில் நஷ்டத்திற்கு இடமுண்டு; சிந்தனைகளின் சூழ்ச்சியில் சிக்கித்தவிப்பீர்கள் துக்கதினம்.

சிம்மம்- குடும்பத்தில் சிறிய பூசல்கள் தலைதூக்கி மறையும்; மனதில் அமைதி குன்றும்; விஷமிகளின்புனைந்துரைகளால் ஆத்திரம் அதிகரிக்கும்.

கன்னி - நலன்தரும் சம்பவங்கள் நடக்கும்; நலிவு சொல்லாமல்பறக்கும் இல்லத்தில் இனிமை பிறக்கும்; சுபமான தினம்.

துலாம்- போட்டி விவகாரங்கள் தலைதூக்கலாம்; சமூகத்தில் மதிப்பு உயரும்; அரசியல் வாதிகள் அதிஷ்டதேவதையை அணைத்துக் கொள்வர்.

விருச்சிகம்- எழுத்தாளர்களுக்கு புதியபடைப்புக்கான கருகிடைக்கும்; நாடகக் கலைஞர்களுக்கு பொன்னான தினம்.

தனுசு- தவறுவபாதையை காட்டுவதற்கு சிலர் முனைவார்கள்; கண்ணியமான நடவடிக்கைகளில் ஈடுபடுவீர்கள்.

மகரம்- மொட்டைக் கடிதமொன்று திடுதிப்பரபரப்பை ஏற்படுத்தும்; தொழில் துறையிலும் நஷ்டம் ஏற்படலாம்.

கும்பம்- காரியத்திறம்கிட்டும்; நீண்டநாள் எதிரிகள் இன்று மீண்டும் நண்பர்கள் ஆவார்கள்; திருப்தியான தினம்.

மீனம்- புகழும், பொருளும் குவிவதற்கானசந்தர்ப்பம் உண்டாகலாம்; பொதுவாகத் தொழில் வெற்றியுண்டு.

சோதிடக்கலாநிதி

திருமலை க. வேலுப்பிள்ளை


## சங்கச் செய்திகள்

வேலணை, புதன் வேலணை மத்தியமகாவித்தியாலய பழைய மாணவர் சங்கக் கூட்டத்தின்போது நடப்பு வருட உத்தியோகத்தராக பின்வருவோர் தெரிவு செய்யப்பட்டனர்.

தலைவர் திரு வி பொன்னுத்துரை, உபதலைவர்கள்: திரு கி நடராசா, திரு ஆர் சிவச்சந்திரன். திரு எஸ் சடாட்சரசண்முகநாதன் செயலாளர் திரு கா பால கிருஷ்ணன் உபசெயலாளர் செல்வி வே முத்தையா பொருளாளர் திரு பி நடராசா, 8பேர் கொண்ட நிர்வாக சபையினரும், கணக்காய்வாளராக இருவரும் தெரிவு செய்யப்பட்டனர். இக்கூட்டத்தில் போது இப்பாடசாலையின் வெள்ளிவிழாபற்றியும் பழைய மாணவர்களுடன் தொடர்பு கொள்வதுபற்றியும் ஆலோசிக்கப்பட்டது.

0 0 0

ஸ்ரீலங்கா ஜாதிகருக சங்கத்தின் வார்ஷாவற்றுறைக் கிளை நிர்வாகிகளைப் புங்குடுதீவில் நடைபெற்ற பிரத்தியேக கூட்டத்தில் பின்வருவோர் தெரிவுசெய்யப்பட்டனர்: தலைவர்; மு இராமலிங்கம், உபதலைவர்கள்: க கந்தப்பு, ந சங்கரப்பிள்ளை, மு தம்பையசிங்கம் செயலாளர்: சி மாணிக்கம், உபசெயலாளர்; எஸ் ஜேபூராசா. தனாதிகாரி: இ இ அப்பாத்துரை, 15 பேர் கொண்ட நிர்வாகக்குழுவும் தெரிவுசெய்யப்பட்டது


குளிர்மையான, மெந்தோல் பில்டர் முனை சிகரெட்டுக்கள். தற்கால நவீன புகையின்பத்திற்கு பசுமையுடன் உங்களை அழைத்துச்செல்வன

நீடிய குளிர்மையான மறுமலர்ச்சி மெட்டஹோன்

CTC சிலோன் டுபாக்கோ கம்பனி லிமிட்டெட்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இடைக்காட்டில்

# நிர்க்கதியானவர்கள் புனர்வாழ்வு நிதி

யாழ்ப்பாணம், வெள்ளி

அச்சுவேலி இடைக்காடு கிராமத்தில் தீவிபத்தினால் நிர்க்கதிக்குள்ளான குடும்பங்களுக்குப் புனர்வாழ்வளிக்கும் முகமாக ஆரம்பிக்கப்பட்ட நிவாரண நிதிக்குப் பலர் தொடர்ந்து உதவி வருகின்றனர். டாக்டர் மு. வேற்பிள்ளை தலைமையில் நிவாரண நிதிக்குழு அமைக்கப்பட்டு இயங்கி வருகிறது. இந்நிதிக்கு நிதி அனுப்பி உதவி வருபவர்கள் பெயர் விபரங்கள் தொடர்ந்து "ஈழநாடு" இதழில் வெளிவந்து கொண்டிருக்கிறது. இதுவரை 146 பேர்களது நிதியுதவி விபரம் வெளிவந்துள்ளது. மற்றும் 141 பேர் விபரம் கீழே தரப்படுகிறது.

க. கணபதிப்பிள்ளை ரூபா 100-00

50 ரூபா வழங்கியோர்: க. சிதம்பரப்பிள்ளை, மு. கணபதிப்பிள்ளை.

30 ரூபா வழங்கியவர்கள்: த முத்துக்குமாரு.

க ஆறுமுகம், நா நடராசா, எஸ் ஞானசேகரன், வே கந்தசாமி, ம பூபாலசிங்கம், நா சிற்றம்பலம், க கந்தசாமி, த சின்னத்துரை, மு மாணிக்கவாசகர் ஆகியோர் 25 ரூபா உதவியுள்ளனர்.

20 ரூபா உதவியவர்கள் விபரம் வருமாறு: ஆ சின்னத்துரை, சி சிவநேசபிள்ளை, கி நாகேசன், மெ வேலுப்பிள்ளை, சி இராசரத்தினம், ஏ கந்தையா, சி தாமோதரம்பிள்ளை, வே கணபதிப்பிள்ளை, நா கந்தசாமி, வே வைரமுத்து, கே தங்கராசா, க நடராசா, வே சத்தியமூர்த்தி, சி ஆறுமுகம், வ சிவக்கொழுந்து.

ரூ. 15-00 அனுப்பியவர்கள்: க சிவலிங்கம், செ இரத்தினம், ஆ வீரசிங்கம், க சிவானந்தன்.

10-00 ரூபா உதவியவர்கள் விபரம்: அச்சுவேலி தபாலதிபர், கந்தசாமி, நா சுப்பிரமணியம், வே முத்தையா, ஆ சின்னத்துரை, என் வேலுப்பிள்ளை, கே தேவராசன், ந தங்கவேல், நா சிறிஸ்கந்தராசா, த இராசலிங்கம், நா செல்லையா, செ சிவரத்தினம், ச சக்திவேலு, வே கதிர்காமு, க நாராயணபிள்ளை, வி நித்தையா, க வைரமுத்து, பொ செல்லத்துரை, க செல்லத்துரை, க கைலாயபிள்ளை, சு இளையதம்பி, செ வைரமுத்து, மு முருகேசு, க சண்முகலிங்கம், ம வேலுப்பிள்ளை, க பாலசுந்தரம், க சரவணமுத்து, ஆ சுப்பிரமணியம், ம சுப்பிரமணியம், ம சிவசுப்பிரமணியம்; ஆ சிவஞானம்; சி இலட்சுமிப்பிள்ளை; பெ சின்னத்துரை; க வேலுப்பிள்ளை; க சிதம்பரப்பிள்ளை; வ சிவகுரு நமசிவாயம்; வி செல்லத்துரை; சு துரையப்பா; க கந்தசாமி; சி இதயக்குமார்; மு சின்னத்தம்பி; பொ பரஞ்சோதி, நா சி கந்தசாமி, க குலசிங்கம், த சின்னக்குட்டி, க முருகுப்பிள்ளை, கை சிதம்பரப்பிள்ளை, மு கனகசபை, ஆ சிற்றம்பலம், சி வள்ளிப்பிள்ளை.

வி. வேலாயுதபிள்ளை 6-00 ரூபா.

ரூபா 5-00 உதவியவர்கள் விபரம் வருமாறு: மு நடராசா, த கணபதிப்பிள்ளை, க சிவமுத்துலிங்கம், வீ சிவஞானசுந்தரம், எஸ் சதாசிவம், வே சின்னடியான், ஏ பாலசுப்பிரமணியம், என் வல்லிபுரம், நா திருநாவுக்கரசு, பொ சுந்தரலிங்கம், ச சடாட்சரம், த ஐயாத்துரை, த சிற்றம்பலம், க பாலசுந்தரம், க ஆறுமுகம், அ அருளானந்தம், இ ஆச்சிப்பிள்ளை, ஆ தாமோதரம்பிள்ளை, த செல்வநாயகம், க சின்னத்தம்பி, வ சோதிலிங்கம், ச சண்முகநாதன், மு இரத்தினம், க வேலுப்பிள்ளை, வ சிதம்பரப்பிள்ளை, சி வேகின்னநாதன், க வள்ளிப்பிள்ளை, க சுமத்திரா தேவி, வே கந்தசாமி, க ஆறுமுகம், செ தியாகராசா.

## இலங்கை கடதாசி ஆலைக் கூட்டுத்தாபனம்

## மாணவர் அப்பியாசப் புத்தகங்கள்

கட்டுப்பாட்டு விலைவில் போதியளவு அப்பியாசப் புத்தகங்களை மாணவர்களுக்குக் கிடைக்கக் கூடியதாகச் செய்வதற்காக இக்கூட்டுத்தாபனத்தால் கடதாசி வழங்கப்படும் அங்கீகரிக்கப்பட்டுள்ள உற்பத்தியாளர்களுடன் அப்பியாசப் புத்தகங்களை உற்பத்திசெய்வதற்கு ஒழுங்குகள் செய்யப்பட்டுள்ளன.

பாடசாலை அதிபர்களும் மற்றும் தலைமையாசிரியர்களும் விரும்பினால் தங்களுக்குத் தேவையான அப்பியாசப் புத்தகங்களைக் கொள்வனவு செய்வதற்கு அனுமதிப்பத்திரத்தைப் பெறுவதற்கு தமது பிரதேச வித்தியாதிபதிக்கு ஊடாக எழுத்துமூலம் இக்கூட்டுத்தாபனத்திற்கு விண்ணப்பம் செய்யலாம். அவ் விண்ணப்பத்தில் அவர்கள் மாணவர் தொகை, அப்பியாசப் புத்தகங்களின் தொகை மற்றும் எவ்விதக் கோட்டினங்கள் தேவை என்று விபரங்களைக் கொடுக்க வேண்டும்.

கூட்டுத்தாபனத்தால் வழங்கப்பெற்ற அனுமதிப்பத்திரங்களைக் கொண்டு கல்வி நிலையங்களின் தலைவர்கள் தங்களுக்குத் தேவையான அப்பியாசப் புத்தகங்களை அங்கீகரிக்கப்பட்ட அப்பியாசப் புத்தக உற்பத்தியாளரிடமிருந்து கூட்டுத்தாபனத்தால் நிர்ணயிக்கப்பட்ட விலைகளில் கொள்வனவு செய்யலாம். உற்பத்தியாளர்கள் மேற்குறிப்பிட்ட விலைகளில் தான் தங்களது பண்டகசாலையிலிருந்து அப்பியாசப் புத்தகங்களைப் பொதிப்படுத்தி எடுத்துச் செல்வதற்கு ஆயத்தமாக ஒப்படைக்கவேண்டும்.

நேரடியாக அப்பியாசப் புத்தகங்களைக் கொள்வனவு செய்ய இயலாத நிலையிலுள்ள கல்விநிலையங்கள் தமக்கு அண்மையிலுள்ள ஆரம்ப ப. நோ. கூ. சங்கங்களிலிருந்து கொள்வனவு செய்துகொள்ளலாம்.

அப்பியாசப் புத்தகங்கள் வருடம் பூராகக் கிடைக்கக்கூடியதாகச் செய்வதற்காக அப்பியாசப் புத்தகங்களின் உற்பத்தி நிகழ்ச்சித் திட்டம் விரிவுபடுத்தப்பட்டுள்ளது. வருடத்தின் ஆரம்பத்தில் ஏற்படும் பெருந் தேவைகளைப் பூர்த்திசெய்வதற்காக தமது தேவைகளைக் குறைந்த அளவிற்குக் கட்டுப்படுத்துமாறு கல்வி நிலையங்கள் வேண்டப்படுகின்றார்கள்.

பொது முகாமையாளர்

இலங்கை கடதாசி ஆலைக் கூட்டுத்தாபனம்.

356, யூனியன் பிளேஸ்,

கொழும்பு - 2

## நாவலர்...

[1ம் பக்கத் தொடர்ச்சி]

நல்லூர் தொகுதி ஆட்சி மன்ற உறுப்பினர் ஆகியோர் நல்லூர் கந்தசாமி கோயில் கோபுர வாசலை வந்தடைந்து விசேஷ பூஜையில் கலந்து கொள்வர். இதன் பின்னர் அவர்கள் நாவலர் இல்லத்துக்கு அழைத்துச் செல்லப்படுவர். அங்கு நாவலர் சபைத் தலைவராலும் நிர்வாக சபை உறுப்பினர்களாலும் மற்றும் பல பொது நிறுவனங்களின் பிரதிநிதிகளாலும் வரவேற்கப்படுவர். பின்னர் இவர்கள் நாவலர் பெருமான் சிலைக்கு மாலைசூட்டுவர். அடுத்து நாவலர் மணிமண்டபத்தின் அருகே அமைந்துள்ள விசேஷ பந்தலில் பொதுக் கூட்டம் நடைபெறும். நாவலர் சபைத் தலைவர் வரவேற்புரை நிகழ்த்துவார். பண்டிதமணி சி கணபதிப்பிள்ளை ஆசியுரை வழங்குவார். அரசாங்க அதிபர், யாழ். நகர மேயர், யாழ். நகர உதவி மேயர், தபால்தந்தி அமைச்சர் ஆகியோர் உரைநிகழ்த்துவர்.

நாவலர் சிலைக்குச் சமீபமாக அமைக்கப்பட்ட தற்காலிக தபால் நிலையத்தில் நினைவு முத்திரை வெளியிடப்படும்.

அன்றைய நடைபெறும் நிகழ்ச்சிகளைத் திரைப்படம் பிடிக்கவும் வானொலியில் ஒலிபரப்பவும் ஏற்பாடு செய்யும்படியும் நாவலர் நினைவு முத்திரை வெளியீட்டுவிழாவிலும் கவியோகி ஆனந்தக்குமாரசாமி நினைவு முத்திரை வெளியீட்டுவிழாவிலும் ஆசிரியர்களும் மாணவர்களும் கலந்து கொள்வதற்கு வசதியாகப் பாடசாலைகளுக்கு அன்றையதினம் விடுதலை விடுமாறு வடபகுதி வித்தியாதிபதிக்கு உத்தரவிடுமாறு கல்விஅமைச்சரைக் கோரும்படியும் தபால்தந்தி அமைச்சரை சபை கேட்டுக் கொண்டுள்ளது.

"நாவலர்" பட்டம் பெற்று யாழ்ப்பாணம் திரும்பிய போது அவருக்கு நல்லூரில் யாழ்ப்பாண மக்கள் அளித்த வரவேற்பின் போது அங்கு திரண்டிருந்த மக்கள் "நாம் உய்ந்தோம், உய்ந்தோம்" என்று மகிழ்ச்சியுடன் ஆரவாரித்தது போன்று நாவலர் முத்திரை வெளியீட்டு விழாவிலும் மகிழ்ச்சி ஆரவாரம் செய்ய வேண்டுமென நாவலர்சபை விரும்புகிறது.

## சனீஸ்வர—

[6-ம் பக்கத் தொடர்ச்சி]

மாதத்துச் சனிக்கிழமைகள் சிறப்பான வழிபாட்டுக் காலமாக இருந்து வருகின்றன. அத் தினத்தில் எள் ளெண்ணெய் எரித்தும் அர்ச்சனைசெய்தும் சனி வழிபாடு செய்வார்கள். அன்று வரதராஜப் பெருமாளையும் விசேஷமாக வழிபடுவார்கள்.

பொன்னாலை வரதராஜப் பெருமாள் கோவில் சனீஸ்வரபகவான் ஆலயத்தில் புரட்டாதிச் சனிக்கிழமை மிகச் சிறப்பாக நடைபெறுகிறது. இந்தவழிபாடு செய்பவர்கள் இருவிதமான பலன்களைப்பெறுகின்றனர். ஒன்று சனீஸ்வரன் அருளைப் பெற்று நன்மை அடைதல், மற்றது சனிபகவான் மூலமாகக் கோவில் திருப்பணிக்கு உதவுதல்.

இக் கோவிலின் பெரிய திருப்பணிகள் பல சனீஸ்வர பகவானின் மூலம் கிடைத்த பணத்தைக்கொண்டே நிறைவேற்றப்பட்டிருப்பது குறிப்பிடத்தக்கதாகும்.

# காவலை மீறிய வயோதிபர் கிணற்றில் குதித்துதற்கொலை

யாழ்ப்பாணம், வியா

உறவினர்கள் சுற்றிவர காவலிருந்தபோதும் அவர்கள் தூங்கி விழுந்த நேரம் பார்த்து அருகிலிருந்த கிணற்றில் குதித்து 77 வயதான வயோதிபர் ஒருவர் தற்கொலை செய்துகொண்டார். இச்சம்பவம் நேற்று திருநெல்வேலியில் நடந்தது.

திருநெல்வேலியைச் சேர்ந்த பொன்னர் சிவப்பிரகாசம் என்பவரின் மரணவிசாரணையின்போது மேற்கண்ட விபரம் தெரியவந்தது.

மரணவிசாரணை அதிகாரி திரு. என். இராசநாயகம் மரணவிசாரணை நடத்தினார்.

இறந்தவர் 8 வருடமாக சுகவீனமுற்றிருந்தாரென்றும் சம்பவம் நடந்ததினம் அவரை வெளியில் செல்லவிடாது உறவினர்கள் காவல் செய்தனரென்றும் உறவினர்கள் நித்திரை செய்த சமயம் அவர் கிணற்றில் விழ்ந்தார் என்றும் விசாரணையில் தெரிவிக்கப்பட்டது.

விசாரணையின் பின் மரண விசாரணை அதிகாரி தற்கொலை எனத் தீர்ப்பளித்தார்.

## கல்வி அமைச்சரின் தீர்மானம்: வடபகுதியில் வரவேற்பு

யாழ்ப்பாணம், வியா.

புனித ரம்ழானில் முதற் பத்து நாட்களிலும் பாடசாலைகள் நடாத்தப்படுவதை வடமாகாண அமீர் அல்ஹாஜ் மௌலவி எஸ் எம் மீரான் முஹிதீன் ஆலிம் தலைமையில் வரவேற்றுள்ளார்கள்.

இவர்கள் வெளியிட்டுள்ள பாராட்டுச் செய்தியில் கல்வி அமைச்சர் கலாநிதி அல்ஹாஜ் பதியுதீன் மஹ்மூதின் தீர்மானம் முஸ்லிம் சிறுர்களின் கல்வி முன்னேற்றத்திற்கு அக்கறை காட்டுவதாக உள்ளதெனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அச்செய்தியில் மேலும் கூறப்பட்டிருப்பதாவது:

முஸ்லிம் ஆசிரியர்களையோ அல்லது முஸ்லிம் சிறுர்களையோ வருத்துவதற்காக செய்த தீர்மானமல்ல இது. எனவே கல்வி அமைச்சரின் தீர்மானத்தை ஏற்றுச் சிரமம் பாராது எமது கடமை என நினைத்து கண்ணியத்துடன் பணிபுரியுமாறு சகல முஸ்லிம் ஆசிரியர்களையும், உலமா மக்களையும் வேண்டிக் கொள்கிறோம்.

# பொறியியல் அபிவிருத்தி ஆராய்ச்சி நிலையம்

## விரைவில் நிறுவப்படும்

கொழும்பு, புதன்

தேசிய பொறியியல் அபிவிருத்தி ஆராய்ச்சிநிலையம் ஒன்று விரைவில் அமைப்பது பற்றி ஆராயப்பட்டிருக்கிறது. இப்பகுதி கைத்தொழில் விஞ்ஞான அமைச்சின் கீழ் இயங்கும் என அமைச்சைச் சேர்ந்த அதிகாரிதெரிவித்தார்.

இதற்கான நடவடிக்கையை அமைச்சர் திரு. ரி. பி. சுபசிங்கா எடுத்துள்ளார்.

நாட்டின் அபிவிருத்திக்கு இயந்திரங்கள் மிகவும் அவசியமாகும், அரசாங்க தனியார் நிறுவனங்களின் தேவையை ஒட்டி உள்ளுரில் இவ்வியந்திரங்களைச் செய்ய முடிவுசெய்யப்பட்டுள்ளது. இதனால் இறக்குமதிச் செலவிடப்படும் அந்நியச் செலாவணி மிச்சமாகும்.

இத்திட்டத்தின்கீழ் ஆரம்பத்தில் மிகச் சிறிய இயந்திரங்கள் இங்கு செய்யப்படும், இதனால் பலருக்கு வேலைவாய்ப்பு ஏற்படும்.

## அடுத்த—

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

சேரம் பேசுகையில், முஸ்லிம்களுக்கென உள்ள இக் கல்லூரியை விடுத்து முஸ்லிம் மாணவர்கள் பிற கல்லூரிகளுக்குக் கல்வி பயில செல்வதனால் இக்கல்லூரியின் வளர்ச்சி பெரிதும் பாதிக்கப்படுகிறதென்றும் இவ்விஷயத்தில் பெற்றோர்கள் கவனஞ்செலுத்தவேண்டும் என்றும் கேட்டுக் கொண்டார்.

தலைமைவகித்த கல்லூரி அதிபர் ஜனாப் எம். எம. குத்தூஸ் பேசுகையில், இக் கல்லூரி அண்மையில் ஆரம்பிக்கப்பட்டதாயினும் ஏனைய கல்லூரிகளின் நிலையை எட்டிப்பிடிக்கக் கூடியதாக வளர்ந்துவருகிறதென்றும் இக்கல்லூரிச் சாரண ஆசிரியர் திரு. ப. முத்துக்குமாரனின் அயராத உழைப்பினால் இவ்வியக்கம் வளர்ந்து குறுகிய காலத்தில் ஏழு பேர் இராணிச் சாரணர்களாக விருது பெற்றுள்ளனர் என்றும் கூறினார்.

விழாவின் முக்கிய நிகழ்ச்சிகளாக அணிவகுப்பு, பாசறைத்தீ நிகழ்ச்சிகள். சாரணர் விளையாட்டுக்கள், கலை நிகழ்ச்சிகள் ஆகியனவும் பரிசுபெற்ற மாணவர்களுக்குப் பரிசளித்தலும் நிகழ்ந்தன.

பெருந்தொகையான மக்கள் வந்திருந்த இவ்விழாவில் வட்டாரக் கல்வியதிகாரி ஜனாப் ஹக்குரும், ஆலோசகர் ஜனாப் அலியும் பேசினர்.

## பிரதமர்-நிக்ஸன் பேச்சுவார்த்தை

நியுயோர்க், ஒக். 13

பிரதமர் திருமதி ஸ்ரீமாவோ பண்டாரநாயக்கா அமெரிக்க அதிபர் நிக்ஸனுடனும் வெளியுறவு அமைச்சர் திரு ரோஜர்சுடனும் வியாழக்கிழமை பேச்சுவார்த்தை நடத்துவதற்காக வாஷிங்டனுக்குச் செல்வார். அவர்களுடன் உலகப் பிரச்னைகள் பற்றியும் இரு நாடுகள் சம்பந்தப்பட்ட விஷயங்கள் பற்றியும் பேச்சுவார்த்தை நடத்துவார்

## நடேஸ்வரா வெற்றி

யாழ்ப்பாணம், வெள்.

காங்கேசன்துறை நடேஸ்வராக் கல்லூரி இரண்டாம் பிரிவு உதைபந்தாட்டக் கோஷ்டிக்கும் சுழிபுரம் விக்டோரியாக் கல்லூரி இரண்டாம் பிரிவு உதைபந்தாட்டக் கோஷ்டிக்கு மிடையில் யாழ்ப்பாணம் பாடசாலைகள் விளையாட்டுச் சங்கத்தின் ஆதரவில் சுழிபுரம் விக்டோரியாக் கல்லூரி மைதானத்தில் நடைபெற்ற உதைபந்தாட்டப் போட்டியில் காங்கேசன்துறை நடேஸ்வராக்கல்லூரி 3 — 2 கோல்களால் வெற்றியீட்டியது.

ஆட்டம் ஆரம்பத்திலிருந்து இறுதிவரை மிகவும் விறுவிறுப்பாகக் காணப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மணிவாக்கு

செல்வம் கள்வராலும் கெடுக்கையாலும், வறுமை சுற்றோரால் கொடாமையாலும், கல்வாதாரிடத்தில் உண்டாகிய செல்வம், கற்றவரிடத்து உண்டாகிய வறுமையினும் மிகத்துன்பஞ் செய்வதாம். — நாவலர்.


# ஈழநாடு

Eelanadu National Tamil Daily
Telegrams: "EELANADU" Jaffna
Post Box: 49 Jaffna Telephone: 389

[illegible] விரோதிகிருது வருஷம் புரட்டாதி மாதம் 29-ந் திகதி (15-10-71)


## பிரதமரின் பேச்சு

ஐக்கிய நாடுகள் சபையிலே பிரதமர் ஸ்ரீமா செய்துள்ள சரித்திர முக்கியம்வாய்ந்த பிரசங்கத்தில் வாலிபர் பிரச்சினையைப்பற்றி உலகநாடுகளின் கவனத்தைச் சரியாக ஈர்த்துள்ளார். இலங்கையில் ஏற்பட்ட பயங்கர இயக்கத்தில் வாலிபர்களில் சிலர் தலைமை தாங்கி நடந்ததையும் அவர்கள் முயற்சி எப்படி அடக்கப்பட்டதென்பதையும் குறிப்பிட்டு விட்டு வாலிபர் பிரச்னை இலங்கைக்கு மட்டுமன்றி உலகில் எல்லா நாடுகளிலும் பொதுவாக உள்ளதென்பதை எடுத்துச் சொன்னார்.

இலங்கையைப்போன்ற அபிவிருத்தி அடையும் நாட்டிலே வேலையில்லாக் கஷ்டம் போன்ற பொருளாதார சங்கடங்கள் வாலிபர் சமூகத்தின் தவிப்புக்குப் பெரிதும் காரணங்களாக உள்ளன. ஆனல் அமெரிக்கா முதலிய நாடுகளில் அவ்வித பொருளாதாரப் பிரச்னைகள் இல்லாத வாலிபர்களும் மயக்க மருந்துகளுக்கு அடிமையாகி எவ்விதம் அவதிப்படுகின்றனர் என்பது உலகறிந்த விஷயம். காரணம் எதுவாயினும் ஒவ்வொரு நாட்டிலும் வாலிபர்கள் அதிருப்தி அடைந்துள்ளதையும் இதனால் நாட்டின் அமைதிக்கும் ஒழுங்குக்கும் ஆபத்து ஏற்படுகின்றதையும் கவனிக்கையில் இந்தப் பொதுப் பிரச்னையைப்பற்றி ஐ.நா. ஸ்தாபனம் விசாரித்து இதற்கான பரிகாரங்களைத் தேடவும் உலக வாலிபர்களுக்குப் புது நம்பிக்கையும் புதுவாழ்வும் அளிக்கவும் தக்க நடவடிக்கைகளை எடுக்க வேண்டியது அவசரமாகிறது.

உதாரணமாக இலங்கை சுதந்திரமடையுமுன் நம்வாலிபர்களில் பலர் பிரிட்டிஷ் சாம்ராஜ்ய நாடுகளுக்குச் சென்று பொறுப்பான பல பதவிகள் வகித்து தங்கள் வாழ்க்கைப் பிரச்னையையும் தீர்த்துக்கொள்ளக் கூடியதாக இருந்தது. நாடு சுதந்திரமடைந்தபின் நம் வாலிபர்கள் இந்நாட்டுக்குள்ளாகவே 'சிறை' யிருக்க வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது. "யாதும் ஊரே யாவரும் கேளிர்" என்பதெல்லாம் வெறும் ஏட்டுச் சுரைக்காய்தான். அண்டை நாடுகளுக்கும் கூடச் செல்ல முடியாதவாறு தடுக்கப்பட்டிருக்கிறார்கள். இங்கும் வேலை வாய்ப்புகள் மிகக்குறைவு. இந்நிலையில் அவர்கள் மனம் உடைவதிலும் தவறான வழிகளில் அவர்கள் செல்லுவதிலும் வியப்பென்ன?

நாம் ஏற்கனவே இப்பத்திகளில் குறிப்பிட்டது போல் ஆசிய வாலிபர்களுக்கே இந்தக் குடியேற்றத் தடைகள் பெரிதும் பாதிக்கின்றன. உலகில் பல பெரும் பகுதிகளையும் வெள்ளைக்காரர்கள் ஆக்கிரமித்துக் கொண்டு அங்கு ஆசியாக்காரர்கள் வரமுடியாதபடி தடைச்சட்டங்கள் போட்டிருக்கிறார்கள். வெள்ளைக்கார வாலிபர்களுக்குக் குடியேற்ற சந்தர்ப்பங்கள் அதிகம் உண்டு. அவர்களுக்கு விசேஷ உதவிகளும் அளிக்கப்படுகின்றன. ஆனல் இலங்கை உள்ளிட்ட ஆசிய வாலிபர் யாரும் வெளிநாடுகளுக்குச் சென்று குடியேற முடியாமலுள்ளது. இது ஆசிய மக்களுக்கும் சிறப்பாக அதன் வாலிபர்களுக்கும் செய்யப்படும் பெரும் அநீதியாகும்.

துரதிருஷ்டவசமாக இந்தப் பெரிய அநீதியை களைக்கவோ அன்றி இதைநீக்கவோ யாதும் எவ்வித முயற்சியும் உலக அரங்கில் இதுவரை எடுக்கவில்லை. இலங்கையின் பிரதமர் இப்பிரச்னையை ஐ.நா. ஸ்தாபனத்தில் எழுப்பியதைத் தொடர்ந்து இனிமேற்றி அந்த ஸ்தாபனத்தின் ஆதரவில் விசாரணை நடத்தவும் இந்த அநீதியை நீக்கி சிறப்பாக ஆசிய வாலிபர்களுக்கு "விடுதலை" அளிக்கவும் தக்க நடவடிக்கை எடுக்க வேண்டிய சமயம் வந்துவிட்டது.

பிரதமர் ஸ்ரீமா கூறியது போல் வாலிபர் பிரச்னை ஓர் உலகப் பிரச்னையாகும். எல்லா நாடுகளும் ஒத்துழைத்தால்தான் இதைத் தீர்க்க வழிவகைகள் செய்ய முடியும். அவசரமானதும் ஆபத்தானதுமான இப்பிரச்னையைப்பற்றி ஐக்கிய நாடுகள் ஸ்தாபனம் இனியும் கவலையீனமாக இருக்க முடியாது. உலக ஸ்தாபனத்தில் விசேஷ மதிப்பும் செல்வாக்குமுள்ள இலங்கைப் பிரதமர் இவ்விஷயம்பற்றி தீவிர முயற்சி எடுப்பின் அது தக்கபயன் அளிப்பதுடன் இலங்கையின் பிரச்னையும் தீர உதவியாகவுமிருக்கும்.

## யாருடைய தாலி?

சுமார் அரைப் பவுண் நிறையுள்ள பின்னியார் தாலியொன்றைத் தெல்லிப்பழை கொல்லங்கலட்டி வீதியைச் சேர்ந்த செ. கதிர்காமநாதன் என்பவர் கொல்லங்கலட்டி வீதியில் கண்டெடுத்து 'ஈழநாடு' காரியாலயத்தில் ஒப்படைத்துள்ளார். உரிமையாளர் 'ஈழநாடு' காரியாலயத்துக்கு அலுவலக நேரத்தில் வந்து தகுந்த அத்தாட்சிகாட்டிப் பெற்றுக்கொள்ளலாம்.

## நெல்...

1ம் பக்கத் தொடர்ச்சி) திரு நவரத்தினம் தயக்கு எழுதியிருப்பதாகவும் தெரிவித்தார்.

பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரியில் தாம் கல்வி பயின்றதை நினைவுபடுத்திய அமைச்சர் கல்யாண விஷயத்தில்கூட வடமராட்சிக்கும் தென்மராட்சிக்கும் அசமயத்தில் நிலவிய போட்டி மனப்பான்மையையும் எடுத்துக் கூறினார்.

# இலங்கையின் புதிய தேசிய சட்டசபையில் 195 உறுப்பினரா?

இலங்கையில் தற்போது தேர்தல்தொகுதிகள் நிர்ணயிக்கப்பட்டுவரும் முறை தொடர்ந்தும் நடைமுறையிலிருந்துவருமானால் புதிய பாராளுமன்றம் அல்லது தேசிய சட்டசபையில் 195 தெரிவுசெய்யப்பட்ட உறுப்பினர்கள் இருப்பார்கள் என்று எதிர்பார்க்கலாம்.

தொகுதிகள் நிர்ணயிக்கப்படும் முறையில் எதிர்வரும் புதிய குடியரசுக்கான அரசியல் திட்டத்தில் எத்தகைய மாற்றங்கள் செய்யப்படுமென்பது இன்னும் தெரியவில்லை.

இப்போது நடைமுறையிலிருக்கும் சோல்பரி அரசியல் திட்டத்தின்படி ஒவ்வொரு குடிசனமதிப்பும் நடைபெற்று ஓராண்டுகாலம்கழிவதற்கு முன்னதாக மூன்று பேரைக் கொண்ட ஒரு தொகுதி நிர்ணயக்குழு அமைக்கப்படவேண்டும். 1946, 1959 ஆகிய ஆண்டுகளில் இத்தகைய குழுக்கள் இலங்கையில் பாராளுமன்றத் தேர்தல் தொகுதிகளை நிர்ணயித்துள்ளன. கடந்த தொகுதி நிர்ணயம் நடைபெற்று சுமார் 12 ஆண்டுகள் சென்றுவிட்டபடியாலும், புதிய குடியரசுமுறை அரசியல் திட்டம் நடைமுறைக்கு வரவிருப்பதாலும் குடிசன மதிப்பு மிக அண்மையில் எடுக்கப்பட்டுள்ளபடியாலும் தொகுதிகள் புதிதாக அமைக்கப்படவேண்டிய அவசியம் ஏற்பட்டுள்ளது.

தற்போதுள்ளவிதிமுறைப்படி ஒரு மாகாணம் ஒரு அலகாகக் கருதப்பட்டு 75,000 மக்களுக்கு ஒரு தொகுதி என்ற அடிப்படையிலும், ஒவ்வொரு ஆயிரம் சதுர மைல் பரப்பிற்கும் ஒவ்வொரு மேலதிக தொகுதி என்ற அடிப்படையிலும் தேர்தல்தொகுதிகள் அமைக்கப்படுகின்றன. உதாரணமாக இரண்டாயிரம் சதுர மைல் விஸ்தீரணமுள்ள மாகாணத்தின் சனத்தொகை ஏழரை லட்சமாக இருந்தால் பரப்பு அடிப்படையில் இரு தொகுதிகள், சனத்தொகை அடிப்படையில் 10 தொகுதிகள் என மொத்தம் 12 தொகுதிகளாக அம்மாகாணம் பிரிக்கப்படும்.

9-10-71ல் எடுக்கப்பட்ட குடிசன மதிப்பின்படி, மாகாண ரீதியாக சனத்தொகை பின்வருமாறு:—

| | |
|---|---|
| மேல்மாகாணம் | 34,28,577 |
| மத்திய மாகாணம் | 19 77,732 |
| தென்மாகாணம் | 16,62,444 |
| வடமாகாணம் | 8,74,285 |
| கீழ்மாகாணம் | 7,24,603 |
| வடமேல்மாகாணம் | 14,11,645 |
| வடமத்தியமாகாணம் | 5,38,669 |
| ஊவாமாகாணம் | 8,10,428 |
| சப்பிரகமுவா மாகாணம் | 13,19.372 |
| மொத்தம் | 1,27,47,755 |

இலங்கையின் நிலப்பரப்பு 25,332 சதுரமைல். எனவே பரப்பு அடிப்படையில் 25 தொகுதிகள் (1000 சதுரமைலுக்கு ஒன்று) வகுக்கப்படவேண்டும். இலங்கையின் மொத்த சனத்தொகையை 75,000ல் வகுக்கும்போது 170 தொகுதிகள் வகுக்கப்படவேண்டும். எனவே எல்லாமாக 170 டன் 25 சேர்ந்து 195 தேர்தல்தொகுதிகளாக இலங்கை பிரிக்கப்படவேண்டும்.

மாகாணரீதியாக விபரங்கள் பின்வருமாறு:—

| மாகாணம் | நிலப்பரப்பு அடிப்படையில் | 1971 சனத்தொகை அடிப்படையில் | மொத்தம் |
|---|---|---|---|
| மேல்மாகாணம் | 1 | 46 | 47 |
| மத்திய .. | 2 | 26 | 28 |
| தென் .. | 2 | 22 | 24 |
| வட .. | 4 | 12 | 16 |
| கீழ் .. | 4 | 10 | 14 |
| வடமேல் .. | 3 | 19 | 22 |
| வடமத்திய .. | 4 | 7 | 11 |
| ஊவா .. | 3 | 11 | 14 |
| சப்பிரகமுவா .. | 2 | 17 | 19 |
| மொத்தம் | 25 | 170 | 195 |

உதவியவர்: -வ மகாதேவன்

# சனீஸ்வர வழிபாடு

(பொன்னாலை, பண்டிதர் இ. பொன்னம்பலவாணர்)

(நாளை புரட்டாதி மாதத்துக் கடைசிச் சனிக்கிழமை. திருமால் சிவன் ஆலயங்களில் சனிபகவானுக்கு எள்எண்ணெய் எரித்து அர்ச்சனை செய்து அருள்பெறுவர். பொன்னாலை வரதராசப் பெருமாள் கோவில், வண்ணை ஸ்ரீ வெங்கடேச வரதராஜப் பெருமாள் கோவில் ஆகியவைகளில் விசேஷ உற்சவங்கள் நாளை நடைபெறும். சனீஸ்வர வழிபாடுபற்றி சுருக்கமாகக் கூறுகிறது இக் கட்டுரை)

சூரியன் முதலிய நவக்கிரகங்கள் சிருஷ்டி ஆரம்பத்தில் பரமாத்மாவால் படைக்கப்பட்டவர்கள். இவர்கள் தவத்தினால் இவ் வதிகாரங்களைப் பெறுவர். வருடம் மாதம் முதலிய காலங்களை வரையறுப்பது இவர்களின் பிரதான வேலையாகும். கிரகங்களால் வகுக்கப்படும் காலங்களில் நாம் பிறக்கின்றோம், செயற்படுகின்றோம். பிறக்கும்போது இருக்கும் கிரக நிலையினை வைத்து ஜாதகம் கணிக்கப்படுகின்றது. அவரவர் செய்த வினைகளுக்கு ஏற்ப இறைவன் நவக்கிரகம் முதலிய தேவதைகளைக் கொண்டு சுகதுக்கங்களைத் தருகின்றார். துக்க நீக்கத்திற்கும் சுகப் பேற்றிற்கும் கிரகசாந்தி முதலியன கூறப்பட்டுள்ளன.

சிறிய தேவதைகளான கிரகங்களை வழிபடும் இரக [illegible] ர் சிலர். ஆனல் கிரகசாந்தி பரதேவதையை முன்னிட்டு நடக்கிறபடியாலும் கிரகநிலை மூலம் அறியும் துன்பங்களை இப்படி இப்படியான முறைப்படி சாந்தி செய்து தீர்க்க வேண்டும் என்று சாஸ்திரங்கள் கூறுவதாலும் கிரகசாந்தி அவசியமானதே.

கிரகசாந்தியினால் உடன் பலன் காணவில்லையென்று சிலர் கூறக் கேட்கின்றோம். இதற்குரிய நியாயமும் சாஸ்திரங்களில் உண்டு. ஸ்திரகர்மா, மத்தியகர்மா, சுவல்பகர்மா என கர்மா மூவகை. ஸ்திரகர்ம சாந்தி முதலியன செய்தபோதும் அனுபவிக்க வேண்டியதே. மத்தியகர்ம சாந்தி முதலியவற்றால் நீங்கும். சுவல்ப கர்மா நவக்கிரக வணக்கத்தாலே நீங்கும். இப்போது சனீஸ்வரக் கிரகம் பற்றிச் சிறிது பார்ப்போம்.

சூரியனுக்கும் சாயாதேவிக்கும் புத்திரனாகப் பிறந்தவர் சனிபகவான். சனீஸ்வரனுக்கு தீயபார்வை உண்டு. பார்வதி தேவியின் சாபத்தால் மெதுவாக நடக்கும் தன்மை பெற்றார். சாயாதேவியின் உபதேசப்படி காசியில் சிவலிங்கபூசை செய்து கிரகங்களில் ஒன்றாக ஆனார். எள்ளே இவருக்கு பிரியதானியம். கருங்குவளை மலர் கருங்காலித்தூபம் இவருக்கு பிரியமானவைகள். காகமும் சிலசமயங்களில் கழுகும் இவரது வாகனங்களாகக் கூறப்படுகின்றன. சனிபகவானுக்கு புதன் சுக்கிரன், ராகு கேது ஆகியோர் நண்பர். சூரியன், சந்திரன், செவ்வாய் என்போர் பகைவர். [illegible] சூரிய காலத்தின் பிற்பகுதியில் அன்பம் செய் [illegible] இரவிலும் இவருக்கு அதிகபலம் உண்டு. எமது உடம்பில் முழங்கால் பாகத்திற்கு இவர் அதிகாரி. ஜாதகத்தில் 3, 6, 10, 11 ஆகிய இடங்களில் மட்டும் நன்மை செய்பவராக இருப்பார். இத்தகைய சாதகம் உள்ளவர்கள் சனீஸ்வரனுக்கிடைக்கும் சுகத்தைப் பெறுவதற்கு சனி வழிபாடு செய்தல் வேண்டும் மற்றவர்கள் பலவிதமான துன்பங்களை நீக்குவதற்கும் இவரது அருளால் நன்மை உண்டாவதற்கும் இவரை வழிபடுதல் அவசியம்.

சனீஸ்வரன் ஒரு ராசியிலிருந்து இன்னொரு ராசிக்கு மாறும் காலங்களிலும் புரட்டாதி மாதத்துச் சனிக்கிழமைகளிலும் சிறப்பாக சனீஸ்வர வழிபாடு செய்வார்கள். அத் தினங்களில் எல்லோரும் எள்ளெண்ணை எரித்தும் அர்ச்சனை முதலியன செய்தும்வழிபடுவர்.

புரட்டாதி மாதத்துச் சனிக்கிழமை வரதராஜர் என அருள் செய்கின்ற திருமாலுக்குச் சிறந்த தினமாகும். பெருமாள் ஆலயங்களில் இருக்கும் சனிபகவான் தன்னை வணங்குவோர்க்கு நன்கு அருள் செய்வதைப் பலரும் அறிவர்.

வரதராஜப் பெருமாள் கோவில்களில் புரட்டாதி

[5-ம் பக்கம் பார்க்க]

இப்பத்திரிகை "ஈழநாடு லிமிட்டெட்" ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் பெரியகோவில் வீதி 65-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1971-ம் ஆண்டு ஒக்டோபர் மாதம் 15ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org